**GTVA/25**

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி–VA க்கான எழுத்துத் தேர்வு

பாடம் : பொதுத் தமிழ் (பட்டப்படிப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 04.01.2025 மு.ப.

Do not use this area

Booklet Serial No. :

Don't write anything in this space

தேர்வு : ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதி–VA க்கான எழுத்துத் தேர்வு

பாடம் : பொதுத் தமிழ் (பட்டப்படிப்புத் தரம்) (தாள் – I) (விரிந்துரைக்கும் வகை)

தேர்வு நாள் : 04.01.2025 மு.ப.

பதிவு எண் :

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

நான் விண்ணப்பதாரரின் நுழைவுச்சீட்டில் உள்ள பதிவு எண், புகைப்படம் மற்றும் கையொப்பம் ஆகியவற்றினை சரிபார்த்த பின் இந்த வினா விடைத் தொகுப்பினை வழங்கினேன்.

அறைக்கண்காணிப்பாளரின் கையொப்பம் மற்றும் தேதி

**சான்று**

(தேர்வு முடிவுற்றவுடன் கையொப்பமிட வேண்டும்)

நான் இந்த வினா விடைத் தொகுப்பில் பதிலளிக்காத விடைப் பகுதிகளை தேர்வு எழுதப் பயன்படுத்திய கருப்பு மை பேனா (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல் பேனா)வினால் குறுக்குக் கோடிட்டுள்ளேன் என உறுதியளிக்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் தேதி

Click here to Visit >> www.GovtJobsNet.com

Click here to Visit >> www.GovtJobsNet.com

Click here to Visit >> www.GovtJobsNet.com
Do not use this area

Click here to Visit >> www.GovtJobsNet.com

# தாள் – I

## பொதுத் தமிழ்
## (விரிந்துரைக்கும் வகை)
## (பட்டப்படிப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம்          மொத்த மதிப்பெண்கள் : 100

(இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு 28 பக்கங்களைக் கொண்டுள்ளது)

**அறிவுரைகள்**

(கீழ்கண்ட அறிவுரைகளை தேர்வர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

1. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பு மொத்தம் 28 பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். வினா-விடைத்தாள் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், தேர்வர் அதனை தேர்வு தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னதாக அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு முழுமையான வினா-விடைத்தாள் தொகுப்பினை கட்டாயம் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு குறைபாடு குறித்து முறையிட்டால், மாற்றித் தரப்படமாட்டாது.

2. தேர்வர்கள் இந்த வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

3. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் கையொப்பமிடுவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து இடங்களிலும் கையொப்பமிட வேண்டும். கையொப்பமிடாத தேர்வர்களின் விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும்.

4. (i) தேர்வர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடை எழுதுவதற்கென வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   (ii) தேர்வர்கள் வினாக்களுக்கு விடையளித்த பின்னர் மீதமுள்ள வெற்றிடங்களையும் விடையளிக்காத வினாவிற்கான வெற்றிடங்களையும் அனுமதிக்கப்பட்ட கருமை நிற மை பேனாவினால் குறுக்கு கோடிட்டு கண்டிப்பாக அடித்துவிட வேண்டும்.

5. தேர்வர்கள் விடையளிக்கும் போது தேவைப்படும் இடங்களில் வினா எண்ணையும், அதன் உட்பிரிவையும் தவறாமல் குறிப்பிட வேண்டும்.



Click here to Visit >> www.GovtJobsNet.com

6. தேர்வர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிக்கும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது. தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்த வேண்டும்.

வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், 'அனுப்புநர்', 'பெறுநர்' முகவரிகளில் 'அ ஆ இ' அல்லது 'எக்ஸ் ஒய் இசட்' போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

7. தேர்வர்கள் இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால், ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

8. தேர்வர்கள் தங்களது பதிவு எண்ணை இவ்வினா-விடைத்தாள் தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் தேர்வர்களின் விடைத்தாள்கள் செல்லாததாக்கப்படும்.

9. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், எழுத்துப்பிழையின்றி எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை.

---



Click here to Visit >> www.GovtJobsNet.com
Click here to Visit >> www.GovtJobsNet.com

## அலகு — I

*குறிப்பு :* **i)** **பின்வரும் ஐந்து வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்க வேண்டும்.**

**ii)** **கட்டுரை 300 சொற்களில் இருக்க வேண்டும்.**

**(1 × 15 = 15)**

| | |
|---|---|
| Q.No. 1 | பண்டைத் தமிழரின் விளையாட்டு, பொழுதுபோக்குகள் பற்றி விளக்குக. |
| Q.No. 2 | தொழில்நுட்பத் துறையில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு குறித்து விளக்குக. |
| Q.No. 3 | தமிழர்களின் மரபு உணவுகள் பற்றியும், அதனால் உடலுக்கு உண்டாகும் நன்மைகள் பற்றியும் ஒரு கட்டுரை வரைக. |
| Q.No. 4 | தமிழகத்தில் அரவானிகள் எதிர்கொள்ளும் சமூக அவலங்கள் குறித்தும், அவர்களுக்கான மனிதநேயத் தீர்வுகள் குறித்தும் ஒரு கட்டுரை வரைக. |
| Q.No. 5 | கல்வித் துறையில் பெண்களின் பங்கு குறித்து ஒரு கட்டுரை வரைக. |

## அலகு — II

*குறிப்பு :* **i)** **பத்தியை நன்கு படித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள ஐந்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**ii)** **ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு மதிப்பெண்கள்.**

**(5 × 2 = 10)**

| | |
|---|---|
| Q.No. 6 | மனிதனுடைய வளர்ச்சியை இரண்டாகப் பகுத்துக் காணலாம். அவற்றை அக வளர்ச்சி என்றும், புற வளர்ச்சி என்றும் அழைக்கலாம். விலங்குகளில் உயர்ந்த விலங்கு மனிதன்; இயற்கைப் படைப்பின் மணிமுடியாக விளங்குபவன் மனிதன். அம்மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும்போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேண வேண்டியவனாகிறான். இதற்குச் சிலப்பண்புகள் தேவைப்படுகின்றன. அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்புரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள். இதுவே அவனுக்கு உலக உறவாக மாறுகின்றது. |

| | |
|---|---|
| 1. | மனிதனுடைய வளர்ச்சியை எவ்வாறு பிரிக்கலாம்? |
| 2. | மனிதனின் இருவளர்ச்சிகள் எவை எவை? |
| 3. | படைப்பின் மணிமுடியாக விளங்குபவன் யார்? |
| 4. | எப்போது மனிதன் தன்னலத்தைப் புறக்கணிக்கிறான்? |
| 5. | பொது நலம் பேணும் மனிதன் பெறும் பண்புகள் எவை எவை? |

Click here to visit >> www.GovtJobsNet.com



Click here to Visit >> www.GovtJobsNet.com

## அலகு — III

*குறிப்பு :* **கொடுக்கப்பட்ட பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 7 | பருவம் பொய்க்காமல் மழை பெய்யும் வளமலையில் வாழும் மயிலுக்குப் பேகன் தன்னுடைய ஆடையைக் கொடுத்தான். இவன் வலிமை வாய்ந்த ஆவியர் குலத்தில் தோன்றியவன்; பெரிய மலை நாட்டுக்கு உரியவன்; வலிமையும் பெருந்தன்மையும் நற்பண்பும் கொண்டவன்; பொதினி மலைக்குத் தலைவன். வண்டுகள் உண்ணும் வண்ணம் நல்ல தேனை மிகுதியாகக் கொண்ட மலர்களைச் சிந்தும் சுரபுன்னை மரங்கள் நிறைந்த நெடுவழியில், மலர்களுடைய முல்லைக்கொடியொன்று பற்றிப்படரத் தான் ஏறிவந்த பெரிய தேரினை ஈந்தவன் பாரி. அவன், வெள்ளிய அருவிகளைக் கொண்ட பறம்புமலையின் தலைவன். உலகம் வியக்கும்படி வெண்மையான பிடரியுடன் தலையை ஆட்டும் குதிரைகளையும் ஏனைய செல்வங்களையும் இனிய மொழிகளுடன் இரவலர்க்கு இல்லையென்னாமல் கொடுப்பவன் காரி என்னும் வள்ளல். இவன், பகைவர் அஞ்சக்கூடிய வகையில் நெருப்பைப் போல் சுடர்விடுகின்ற நீண்ட வேலினையும் வீரக்கழலையும் உடையவன்; தோள்வளையை அணிந்த நீண்ட கைகளை உடையவன். ஒளிமிக்க நீலவண்ணக் கல்லையும் நாகம் கொடுத்த ஆடையினையும் மன விருப்பம் கொண்டு ஆலின் கீழ் அமர்ந்த இறைவனுக்குக் கொடுத்தவன், ஆய் என்னும் வள்ளல். இவன் வில் ஏந்தியவன்; சந்தனம் பூசி உலர்ந்த தோள்களை உடையவன்; ஆர்வத்துடன் இனிமையான மொழிகளைப் பேசுபவன். |

## அலகு — IV

*குறிப்பு :* **கொடுக்கப்பட்ட சுருக்கமான குறிப்புகளைக் கொண்டு விரிவாக எழுதுக.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 8 | மக்களின் வாழ்வியல் முறை, இலக்கியம், சமயம், கலை, நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைக் கூறுவது – நாகரிகம் பண்பாடு நெருங்கிய தொடர்பு – நாகரிகம் புறவளர்ச்சி – பண்பாடு அகவளர்ச்சி – உணவு, உடை, உறையுள், தொழில், கலை, இலக்கியம் போன்றவற்றின் வளர்ச்சி நாகரிகம் – தனி மனிதப் பண்பு ஆகிய அன்பு, அருள், அறம், மறம், காதல், கற்பு போன்றன பண்பாடு. |

## அலகு — V

*குறிப்பு :* **கொடுக்கப்பட்ட ஆங்கில பத்தியை நன்குப் படித்து கருத்துச் சிதையாமல் தமிழில் மொழிபெயர்க்கவும்.**

**(1 × 10 = 10)**

| Q.No. | |
|---|---|
| 9 | There is nothing in the world as valuable as time. The man who falls to utilise his time carefully will ever remain poor. The man who uses every minute of his time wisely will gain many advantages.<br><br>Every night before going to bed, think over the day's happenings. Ask yourself if you have wasted any moment of the day. If you have make a resolve to be carefully in future. Spare some time everyday for prayer. |



Click here to Visit >> www.GovtJobsNet.com

## அலகு — VII

*குறிப்பு :* **i)** கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு விடையளிக்கவும்.

**ii)** ஒவ்வொரு வினாவிற்கும் **15** மதிப்பெண்கள்.

**iii)** **250** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

**(1 × 15 = 15)**

| | |
|---|---|
| Q.No. 10 | 'மாவட்ட அளவில் கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து நடத்திய, மாபெரும் தமிழ்க் கனவு' என்ற தமிழ்ப் பண்பாட்டுப் பரப்புரை நிகழ்வைக் குறித்து, ஓர் அறிக்கையைத் தயார் செய்து, மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநருக்கு அனுப்பும் அலுவலகக் கடிதம் வரைக. |
| Q.No. 11 | தமிழ்நாடு கலை பண்பாட்டு மையத்தின் உதவியுடன் நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சி பெற்ற அரசுக் கல்லூரி மாணவர்கள் குறித்தும், பயிற்சியால் முன்னேறிய மாணவர்கள் குறித்தும் ஓராண்டுத் திட்ட மதிப்பீட்டறிக்கை (2024-2025) தயார் செய்து மாவட்ட ஆட்சியருக்கு வழங்குக. |
| Q.No. 12 | பள்ளிக்குத் தேவையான வகுப்பறைகள் வேண்டி கருத்துரு ஒன்றினைத் தமிழக அரசுக்கு வழங்குக. |

## அலகு — VII

*குறிப்பு :* **i)** பின்வரும் ஐந்து பிரிவுகளில், ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து வினாக்கள் உள்ளன.

**ii)** ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**iii)** ஒவ்வொரு பிரிவிற்கும் ஆறு மதிப்பெண்கள் **(3 × 2 = 6)**.

**iv)** ஐந்து பிரிவுகளுக்கும் சேர்த்து முப்பது மதிப்பெண்கள் **(5 × 6 = 30)**.

| | |
|---|---|
| Q.No. 13 | வாக்கியத்தில் அமைத்து எழுதுக.<br>எவையேனும் மூன்று வினாக்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றினை வாக்கியத்தில் அமைத்து எழுதுக. |
| (1) | ஓடியோடி |
| (2) | நற்கதி |
| (3) | குறிக்கோளை அடையும் வரை |
| (4) | சர்க்கரையும் கற்கண்டும் |
| (5) | கதைகட்டி விடுதல் |



Click here to Visit >> www.GovtJobsNet.com

| Q.No. 14 | இணைச் சொற்களைப் பயன்படுத்தித் தொடர் அமைத்தல்.<br>பின்வரும் இணைச் சொற்களில் மூன்றினுக்குத் தொடர் அமைக்க. |
|---|---|
| (1) | அல்லும் பகலும் |
| (2) | செக்கச் செவேலென |
| (3) | ஆற அமர |
| (4) | அழுது புரண்டு |
| (5) | தெள்ளத் தெளிவாக |

| Q.No. 15 | அகர வரிசைப்படுத்துதல்.<br>எவையேனும் மூன்று வினாக்களைத் தேர்ந்தெடுத்து அகர வரிசைப்படுத்துக. |
|---|---|
| (1) | உணவு, உலை, உண், உண்மை |
| (2) | தாது, தாதி, தூது, தீது |
| (3) | தங்கம், அங்கம், தங்கை, அஞ்சல் |
| (4) | முகை, மொட்டு, அரும்பு, அருமை |
| (5) | மரம், மறை, மறு, மறதி |

| Q.No. 16 | பிழைநீக்கி எழுதுதல்.<br>எவையேனும் மூன்று தொடர்களில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக. |
|---|---|
| (1) | நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது. |
| (2) | மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றது. |
| (3) | எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது. |
| (4) | ஐப்பசி அடை மழையில் ஊருணி நிறைந்தது. |
| (5) | இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும். |

| Q.No. 17 | கலைச்சொல்லாக்கம் தருக.<br>எவையேனும் மூன்று சொற்களுக்குத் துறைசார் ஆட்சித் தமிழ் கலைச்சொல்லாக்கம் தருக. |
|---|---|
| (1) | Agricultural Credit Society |
| (2) | Audit Intimation |
| (3) | Book Adjustment |
| (4) | Conveyance allowance |
| (5) | Debit and Credit entries |



Click here to Visit >> www.GovtJobsNet.com